# பணமும் வங்கித்தொழிலும்

## பணநிரம்பல்


1987 இல் பலவகைப்பட்ட நாணயக் கூட்டுக்களில் ஏற்பட்ட வளர்ச்சி குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது. உள்நாட்டுக் கொடுகடன் விரிவாக்கத்தின் உயர் வீதமும் போலி நாணய வளர்ச்சியில் ஏற்பட்ட மீள் அதிகரிப்பும் 1987 இன் நாணய அபிவிருத்திகளின் முக்கிய பண்புகளாக விளங்கின. பொதுமக்கள் வசமுள்ள நாணயத்தையும் கேள்வி வைப்புக்களையும் கொண்ட குறுகிய பணநிரம்பல் ($M_1$) 1986 இன் ரூ. 24,180 இலட்சம் அல்லது 13 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ரூ. 39,040 இலட்சத்தால் அல்லது 18 சதவீதத்தால் உயர்வடைந்தது. இதேவேளை வர்த்தக வங்கிகளில் பொது மக்களால் வைப்புச் செய்யப்பட்ட தவணை, சேமிப்பு வைப்புக்கள் (போலி நாணயம்) ரூ. 35,710 இலட்சத்தால் அதிகரித்தது. இதன் விளைவாக $M_1$ இனதும் போலி நாணயத்தினதும் கூட்டாக விரைவிலக்கணப்படுத்தப்பட்ட விரிந்த பணநிரம்பல் ($M_2$) முன்னைய ஆண்டின் ரூ. 24,510 இலட்சம் அல்லது 5 சதவீதங் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் ரூ. 74,750 இலட்சத்தால் அல்லது 15 சதவீதத்தால் அதிகளவு அதிகரித்தது.

$M_1$ இன் இரு கூறுகளும் அதாவது நாணயமும் கேள்வி • வைப்புக்களும் 1987 இல் அதிகளவு அதிகரிப்புக்களைப் பதிவு செய்தன. நாணயக் கூறு ரூ. 19,250 இலட்சத்தால் அல்லது 17 சதவீதத்தால் உயர்வடைந்தவேளையில் கேள்வி வைப்புக் கூறு ரூ. 19,790 இலட்சம் அல்லது 21 சதவீதமான வளர்ச்சியினைப் பதிவு செய்தது. $M_1$ இலுள்ள கேள்வி வைப்புக் கூறில் காணப்பட்ட சிறிதளவு உயர்வான வளர்ச்சி $M_1$ இல் அதன் பங்கில் 1 சதவீதமான சிறிதளவு அதிகரிப்பினை விளைவித்து 1987 இறுதியில் அதனை 46 சதவீதமாக உயர்த்தியது. எனினும் நாணயத்திற்கான பொதுமக்களின் கேள்வி குறிப்பாக ரூ. 1,000, ரூ. 500 இன் நாணயத் தாள்களுக்கானவை உயர்வானதாக விளங்கி உயர்ந்த பெறுமதியுள்ள கொடுக்கல் வாங்கல்களில் நாணயத்தின் அதிகரித்த பயன்பாட்டினையும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வழமையான வங்கித்தொழில் நேரங்கள் பாதிக்கப் பட்டமையையும் பிரதிபலித்தது. மொத்த நாணய வெளியீட்டில் இந்நாணயத் தாள்களின் பங்கு 1986 இன் இறுதியின் 56 சதவீதத்திலிருந்து 1987 இறுதியில் 61 சதவீதத்திற்கு உயர்வடைந்தது.

1987 இல் போலி நாணயம் 1986 இன் ரூ. 330 இலட்சங் கொண்ட சிறிதளவு அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ரூ. 35,710 இலட்சத்தால் அல்லது 12 சதவீதத்தால் உயர்வடைந்தது. ரூ. 33,840 இலட்சத்தால் அல்லது 14 சதவீதத்தால் அதிகரித்த ஏனைய தனியார்துறைத் தொகுதிகளின் அதாவது உண்மையான தனியார் துறையின் தவணை, சேமிப்பு வைப்புக்களில் இவ்வதிகரிப்பு முக்கியமாகப் பிரதிபலித்தது. இவ்வதிகரிப்பில் 50 சதவீதத்திற்கும் கூடியது ஆண்டின் இறுதிக் காலாண்டிலே ஏற்பட்டது. ரூபாவின் பெறுமதிக் குறைவின் பெருமளவு காரணத்தால் ரூபா நியதியில் ஏற்றுமதி விலைகள் சார்பு ரீதியில் உயர்ந்தமையும் வங்கிகளினதும் ஏனைய போட்டி நிறுவனங்களினதும் வைப்பு வீதங்களுக்கிடையிலான வேறுபாடு குறைக்கப்பட்டமையும் இக்காலப்பகுதியில் தனியார்துறையின் தவணை, சேமிப்பு வைப்புக்களின் கணிசமானளவு வளர்ச்சிக்குப் பங்களிக்கும் முக்கிய காரணிகளாக விளங்கின. அரச கூட்டுத்தாபனங்களின் தவணை, சேமிப்பு வைப்புக்கள் முன்னைய ஆண்டின் ரூ. 10,670 இலட்சங் கொண்ட கடுமையான

## பண நிரம்பல்

மாதாந்தம்




இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 1.46

## நாணயக்கூட்டுக்கள் 1985—1987

பத்து இலட்சம் ரூபாய்களில்

| கால முடிவில் | குறுகிய பண நிரம்பல் (M1) | | | | | | விரிந்த பண நிரம்பல் (M2) | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1985 | 1986 | 1987 | 1984 ஐவிட 1985 இல் சதவீதம் மாற்றம் | 1985 ஐவிட 1986 இல் சதவீதம் மாற்றம் | 1986 ஐவிட 1987 இல சதவீதம் மாற்றம் | 1985 | 1986 | 1987 | 1984 ஐவிட 1985 இல் சதவீத மாற்றம் | 1985 ஐவிட 1986 இல் சதவீத மாற்றம் | 1986 ஐவிட 1987 இல் சதவீத மாற்றம் |
| சனவரி ... | 16,522 | 18,456 | 21,845 | + 10.4 | + 11.7 | + 18.4 | 43,923 | 48,498 | 51,887 | + 14.8 | + 10.4 | + 7.0 |
| பெப்புருவரி ... | 16,595 | 19,062 | 21,738 | + 11.1 | + 14.9 | + 14.0 | 44,849 | 48,587 | 52,799 | + 14.9 | + 8.3 | + 8.7 |
| மாச்சு ... | 17,237 | 20,454 | 22,556 | + 11.7 | + 18.7 | + 10.3 | 45,230 | 49,410 | 53,855 | + 13.8 | + 9.2 | + 9.0 |
| ஏப்பிறல் ... | 17,332 | 20,287 | 22,121 | + 13.2 | + 17.1 | + 9.0 | 46,019 | 49,335 | 53,278 | + 16.1 | + 7.2 | + 8.0 |
| மே ... | 17,208 | 20,043 | 22,305 | + 20.1 | + 16.5 | + 11.3 | 46,092 | 49,119 | 53,972 | + 17.8 | + 6.6 | + 9.9 |
| யூன் ... | 17,339 | 19,949 | 22,075 | + 17.4 | + 15.1 | + 10.7 | 46,233 | 48,959 | 53,942 | + 16.5 | + 5.9 | + 10.2 |
| யூலை ... | 16,969 | 19,615 | 22,574 | + 13.9 | + 15.6 | + 15.1 | 46,631 | 48,882 | 54,624 | + 17.6 | + 4.8 | + 11.7 |
| ஓகத்து ... | 17,232 | 19,731 | 23,160 | + 16.4 | + 14.5 | + 17.4 | 46,991 | 48,771 | 55,236 | + 18.2 | + 3.8 | + 13.3 |
| செத்தெம்பர் ... | 17,460 | 20,399 | 22,973 | + 12.3 | + 16.8 | + 12.6 | 47,917 | 49,430 | 55,927 | + 17.4 | + 3.2 | + 13.1 |
| ஒற்ரோபர் ... | 17,768 | 20,219 | 23,143 | + 10.8 | + 13.8 | + 14.5 | 48,359 | 49,868 | 56,560 | + 16.3 | + 3.1 | + 13.4 |
| நவெம்பர் ... | 18,187 | 20,293 | 23,551 | + 16.0 | + 11.6 | + 16.1 | 47,247 | 50,057 | 56,916 | + 12.5 | + 6.0 | + 13.7 |
| திசெம்பர் ... | 18,761 | 21,179 | 25,083 | + 11.5 | + 12.9 | + 18.4 | 48,409 | 50,860 | 58,335 | + 11.4 | + 5.1 | + 14.7 |
| மாதாந்த சராசரி ... | 17,384 | 19,974 | 22,760 | + 13.7 | + 14.9 | + 14.0 | 46,492 | 49,315 | 54,778 | + 15.6 | + 6.1 | + 11.1 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

வீழ்ச்சிக்கு மாறாக ரூ. 1,190 இலட்சங் கொண்ட சிறு அதிகரிப்பினைப் பதிவு செய்தது. இதேபோல, கூட்டுறவு நிறுவனங்களின் தவணை, சேமிப்பு வைப்புக்கள் 1987 இல் ரூ. 690 இலட்சத்தினால் அதிகரித்தன.

விரிந்த பணநிரம்பலின் எல்லாக் கூறுகளும் அதிகரிப்புக்களைப் பதிவு செய்தமையால் M2 இன் வளர்ச்சி வீதம் 1986 இன் 5 சதவீத மட்டத்திலிருந்து 1987 இல் 15 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. இவ்வாண்டு முழுவதும் ஆண்டு வளர்ச்சி வீதம் தொடர்ச்சியாக அதிகரித்து ஆண்டு முடிவில் 15 சதவீதமான அதிகூடிய வீதத்தினை அடைந்தமையை இந்நாணயக் கூட்டுக்களின் மாதாந்த அசைவுகள் காட்டுகின்றன.

1987 இல் M2 இன் வளர்ச்சிக்கான முதன்மை பங்களிப்புக் காரணி கொடுகடனில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பாகும். 1987 இல் உள்நாட்டுக் கொடுகடன் விரிவாக்கம் 1986 இன் ரூ. 48,830 இலட்சம் அல்லது 8 சதவீத விரிவாக்கத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 114,570 இலட்சம் அல்லது 18 சதவீதமாக விளங்கியது. உள்நாட்டுக் கொடுகடனின் வளர்ச்சி வங்கித்தொழில் துறையிலிருந்தான அரசிற்கான தேறிய கொடுகடனில் ஏற்பட்ட ரூ. 45,020 இலட்சம் அல்லது 20 சதவீத அதிகரிப்பையும் வர்த்தக வங்கிகளிலிருந்தான தனியார் துறைக்கான மொத்தக் கொடுகடனில் ஏற்பட்ட ரூ. 69,550 இலட்சம் அல்லது 17 சதவீத அதிகரிப்பையும் உள்ளடக்கியிருந்தது. அரசிற்கான தேறிய கொடுகடன்களினதும் தனியார்துறைக்கான மொத்தக் கொடுகடனினதும் முன்னைய ஆண்டின் ஒப்பிடத்தக்க எண் தொகைகள் முறையே ரூ. 21,980 இலட்சம் அல்லது 11 சதவீதமாகவும் ரூ. 26,840 இலட்சம் அல்லது 7 சதவீதமாகவும் விளங்கின. அரசிற்கான தேறிய கொடுகடனின் வளர்ச்சி மொத்த உள்நாட்டுக் கொடுகடனில் அதன் பங்கு 1986 இன் 35 சதவீதத்திலிருந்து 1987 இல் 36 சதவீதமாக உயர்வடைந்தமையில் பிரதிபலிக்கப்பட்டது. 1987 இல் பன்னாட்டு நாணய நிதியத்திற்கான பொறுப்புக்களின் தொடர்ச்சியான மறு மதிப்பீட்டினைத் தொடர்ந்து நிதியத்திற்கான இலங்கையின் கடப்பாடுகளை ஈடுசெய்வதற்காக மத்திய வங்கியால் வழங்கப்பட்ட ரூ. 6,830 இலட்சம் பெறுமதியான சிறப்புக் கடன் ஒன்றையும் ரூ. 45,020 இலட்சங் கொண்ட அரசிற்கான தேறிய கொடுகடனின் விரிவாக்கம் உள்ளடக்குகின்றது. இதை இவ்வாண்டின் வழமையான வரவு செலவுத்திட்டத் தொழிற்பாடுகளுடன் தொடர்புபடுத்த முடியாது.

அரசிற்கான தேறிய கொடுகடனின் விரிவாக்கத்திற்கு வர்த்தக வங்கிகள் முக்கியமாகத் திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்வதன் மூலமே பெருமளவு உதவுதொகைகளை அளித்தன. 1987 இல் வர்த்தக வங்கிகளிலிருந்தான அரசிற்கான தேறிய கொடுகடன் ரூ. 30,350 இலட்சத்தால் அதிகரித்தது. 1987 ஓகத்தில் நியதிச்சட்ட ஒதுக்கு விகிதங்கள் குறைக்கப்பட்டதன் விளைவாகத் திரவத் தன்மையில் ஏற்பட்ட விரிவாக்கத்தினைத் தொடர்ந்து வர்த்தக வங்கிகள் குறுகிய கால நிதியங்களை வைப்பதற்குத் திறைசேரி உண்டியல்கள் கவர்ச்சியான முதலீட்டு வகையாகத் தொடர்ந்தும் காணப்பட்டன. இதேவேளை மத்திய வங்கியிலிருந்து அரசிற்கான தேறிய கொடுகடனின் அதிகரிப்பு இவ்வாண்டில் ரூ. 14,680 இலட்சத்திற்கு அல்லது 6 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டது. முன்னைய ஆண்டைப்போலவே 1987 பெப்புருவரியில் ரூ. 17,230 இலட்சத்திற்கு வகைகூறும் மத்திய வங்கியின் இலாபம் மாற்றல் செய்யப்பட்டமை மத்திய வங்கியிலிருந்தான அதன் கடன்பாடுகளை இந்த மட்டத்தில் கட்டுப்படுத்துவதற்கு அரசிற்கு உதவியது.


இவ்வாண்டில் ரூ. 69,550 இலட்சத்திற்கு வகை கூறும் தனியார் துறைக்கான மொத்தக் கொடுகடனில் ஏற்பட்ட வளர்ச்சியின் பெரும் பங்கு ஏனைய தனியார்துறைத் தொகுதிகள் தொடர்பானதாக விளங்கியது. 1986 இன், ரூ. 22,630 இலட்சம் அல்லது 7 சதவீதமான அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1987 இல் ஏனைய தனியார்துறைத் தொகுதிக்கான வர்த்தக வங்கிக் கொடுகடன் ரூ. 46,290 இலட்சத்தால் அல்லது 13 சதவீதத்தால் அதிகரித்தது. பின்னையது இவ்வாண்டில் தனியார்துறைக்கான மொத்தக் கொடுகடன் வளர்ச்சியில் ஏறத்தாள மூன்றில் இரண்டு பங்கை எடுத்துக்கொண்டது. இவ்வதிகரிப்பில் அரைப் பங்கிற்கும் அதிகமானது, ஆண்டின் இறுதிக் காலாண்டிலேயே ஏற்பட்டது. தனியார்துறை வங்கிக் கொடுகடனை அதிகரித்தளவில் பயன்படுத்தியமை சார்பு ரீதியில் சாதகமான விலைகளினால் ஏற்றுமதிக் கொடுகடனுக்கான கேள்வி அதிகரித்தமையிலும் அதிகரித்த ரூபாப் பெறுமதியினை ஈடுசெய்வதற்கு இறக்குமதிக்கும் அதனோடு இணைந்த நடவடிக்கைகளுக்கும் கொடுகடனுக்கான தேவை அதிகரித்தமையிலும் பிரதிபலித்தது. இவ்வாண்டில் ஏனைய தனியார்துறைத் தொகுதிக்கான கொடுகடன் முக்கியமாக முறையே ரூ. 28,600 இலட்சம் ரூ. 13,180 இலட்சம் அதிகரிப்புக்களைப் பதிவு செய்த கடன்கள், மேலதிகப் பற்றுக்கள் ஆகிய வடிவில் அமைந்திருந்தன.

அரச கூட்டுத்தாபனங்களுக்கான வர்த்தக வங்கிக் கொடுகடன் 1986 இன் ரூ. 3,010 இலட்சமும் 1985 இன் ரூ. 2,900 இலட்சமுங் கொண்ட சிறிதளவு அதிகரிப்புக்களுடன் ஒப்பிடுகையில் 1987 இல் ரூ. 26,270 இலட்சம் அல்லது 55 சதவீதத்தால் கணிசமானளவில் அதிகரித்தது. 1987 இல் கணிசமானளவு கொடுகடன் வளர்ச்சியினைப் பதிவு செய்த கூட்டுத்தாபனங்களாவன அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் (ரூ. 2,880 இலட்சம்), மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை (ரூ. 3,530 இலட்சம்), இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (ரூ.13,080 இலட்சம்), கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் (ரூ. 2,230 இலட்சம்) என்பனவாகும். அரசுக்குச் சொந்தமான பெருந்தோட்டங்களின் அபிவிருத்திக்காக நடுத்தரகால முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் திறமையாக நடைமுறைப்படுத்தப்பட்டமையே இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கும் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குமான வங்கிக் கொடுகடன் அதிகரித்தமைக்கு முக்கிய பொறுப்பாகும். இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கொடுகடன் பாவனையை அதிகரித்தமைக்கு உயர்ந்த விலையில் மசகு எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டதும் பராமரிப்பு நோக்கங்களுக்காகச் சுத்திகரிப்பு நிலையம் மூடப்பட்டபோது கேள்வியினைச் சமாளிப்பதற்காக முடிவுப் பொருட்களின் இருப்புக்களை உயர்த்தியமையும் காரணங்களாக இருந்தன. கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்திற்கான கொடுகடன் அதிகரித்தமைக்கு அத்தியாவசிய உணவுப் பண்டங்களின் தொகை வடிவிலான இறக்குமதி பெருமளவுக்குக் காரணமாகும்.

கூட்டுறவு நிறுவனங்களுக்கான கொடுகடன் 1986 இன் ரூ. 1,200 இலட்சம் அல்லது 9 சதவீத அதிகரிப்புக்கு மாறாக 1987 இல் ரூ. 3,010 இலட்சத்தால் அல்லது 21 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. உள்நாட்டுக் குழப்பங்களினால் பாதிப்படைந்த பகுதிகளில் வேளாண்மை உற்பத்திகளின் பயிர்ச்செய்கைக்கும் சந்தைப்படுத்தலுக்குமான கடன் வழங்கல் நடவடிக்கையில் ஏற்பட்ட வீழ்ச்சியும் குறிப்பிட்ட மாவட்டங்களில் நிலவிய வரட்சி நிலைமைகளுமே இத்துறைக்கான கொடுகடன் வீழ்ச்சிக்குப் பொறுப்பான காரணிகளாகும்.

## உள்நாட்டுக் கொடுகடன்

மாதாந்தம்




இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 1.47

## நாணயக் கூட்டுக்களும் ஏதுக்காரணிகளும்

தொகை பத்து இலட்சம் ரூபாய்களில்


| விடயம் | 1985 திசெம்பர் | 1986 திசெம்பர் | 1987 திசெம்பர் | மாற்றம் 1985/1986 தொகை | மாற்றம் 1985/1986 சதவீதம் | மாற்றம் 1986/1987 தொகை | மாற்றம் 1986/1987 சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| **நாணயக் கூட்டுக்கள்** | | | | | | | |
| 1. மக்களால் வைத்திருக்கப்பட்ட நாணயம் ... | 9,815.5 | 11,570.0 | 13,495.3 | + 1,754.4 | + 17.9 | + 1,925.3 | + 16.6 |
| 2. மக்களால் வைத்திருக்கப்பட்ட கேள்வி வைப்புக்கள் ... | 8,945.5 | 9,609.3 | 11,588.0 | + 663.8 | + 7.4 | + 1.978.8 | + 20.6 |
| குறுகிய பண நிரம்பல் (M1) ... | 18,761.0 | 21,179.3 | 25,083.3 | + 2,418.2 | + 12.9 | + 3,904.1 | + 18.4 |
| 3. வர்த்தக வங்கிகளில் தனியார்துறை வைத்திருக்கும் தவணை சேமிப்பு வைப்புக்கள் ... | 29,647.9 | 29,681.0 | 33,251.7 | + 33.2 | + 0.1 | + 3,570.6 | + 12.0 |
| 3.1 கூட்டுறவு நிறுவனங்கள் ... | 633.5 | 702.2 | 770.6 | + 68.7 | + 10.8 | + 68.5 | + 9.7 |
| 3.2 அரச கூட்டுத்தாபனங்கள் ... | 5,809.5 | 4,742.1 | 4,860.8 | + 1,067.3 | — 18.4 | + 118.6 | + 2.5 |
| 3.3 ஏனைய தனியார்துறை வாடிக்கையாளர்கள்* ... | 23,204.9 | 24,236.7 | 27,620.3 | + 1,031.8 | + 4.4 | + 3,383.5 | + 13.9 |
| **விரிந்த பண நிரம்பல் (M2)** ... | **48,408.9** | **50,860.3** | **58,335.0** | **+ 2,451.4** | **+ 5.1** | **+ 7,474.7** | **+ 14.7** |
| **ஏதுக்காரணிகள்** | | | | | | | |
| 1. உள்நாட்டுக் கொடுகடன் ... | 59,226.1 | 64,108.8 | 75,565.5 | + 4,882.7 | + 8.2 | +11,456.6 | + 17.9 |
| 1.1 அரசிற்கு வழங்கப்பட்ட தேறிய கொடுகடன் ... | 20,347.6 | 22,546.1 | 27,047.9 | + 2,198.5 | + 10.8 | + 4,501.8 | + 20.0 |
| 1.1.1 அரசிற்கு வழங்கப்பட்ட மொத்தக் கொடுகடன் ... | 25,657.9 | 27,599.4 | 31,518.6 | + 1,941.5 | + 7.6 | + 3,919.3 | + 14.2 |
| மத்திய வங்கியால் ... | 22,760.6 | 24,846.0 | 26,156.8 | + 2,085.5 | + 9.2 | + 1,310.8 | + 5.3 |
| வர்த்தக வங்கிகளால் ... | 2,897.3 | 2,753.4 | 5,361.8 | — 144.0 | — 5.0 | + 2,608.5 | + 94.7 |
| 1.1.2 அரசின் வைப்புக்களும் காசு நிலுவைகளும் ... | — 5,310.3 | — 5,053.3 | — 4,470.7 | + 257.0 | + 4.8 | + 582.5 | + 11.5 |
| 1.2 தனியார்துறைக்கு வழங்கப்பட்ட மொத்தக் கொடுகடன் ... | 38,878.5 | 41,562.7 | 48,517.6 | + 2,684.2 | + 6.9 | + 6,954.8 | + 16.7 |
| 1.2.1 கூட்டுறவு நிறுவனங்கள் ... | 1,304.3 | 1,424.5 | 1,123.4 | + 120.2 | + 9.2 | — 301.1 | — 21.1 |
| 1.2.2 அரச கூட்டுத்தாபனங்கள் ... | 4,437.9 | 4,738.5 | 7,365.7 | + 300.6 | + 6.8 | + 2,627.2 | + 55.4 |
| 1.2.3 ஏனைய தனியார்துறை வாடிக்கையாளர்கள் ... | 33,136.3 | 35,399.7 | 40,028.5 | + 2,263.4 | + 6·8 | + 4,628.7 | + 13.1 |
| 2. வெளிநாட்டு வங்கித் தொழில் சொத்துக்கள் (தேறிய) ... | 9,272.7 | 8,859.1 | 8,416.1 | — 413.6 | — 4.5 | — 443.0 | — 5.0 |
| 3. ஏனைய விடயங்கள் (தேறிய) ... | —20,089.9 | —22,107.6 | — 25,646.6 | — 2,017.7 | — 10.0 | — 3,538.9 | — 16.1 |
| 3.1 மத்திய வங்கியின் ஏனைய பொறுப்புக்கள் (தேறிய) ... | —13,197.2 | — 15,332.4 | — 15,281.5 | — 2,135.2 | | + 50.8 | |
| 3.2 வர்த்தக வங்கிகளின் ஏனைய பொறுப்புக்கள் (தேறிய) ... | — 7,186.9 | — 6,880.9 | — 10,413.2 | + 306.0 | | — 3,532.2 | |
| 3.3 இடைப்போக்கிலுள்ள விடயங்கட்கான சீராக்கங்கள் ... | 294.2 | 105.7 | 48.1 | — 188.6 | | — 57.5 | |
| **விரிந்த பண நிரம்பல்(M2)** ... | **48,408.9** | **50,860.3** | **58,335.0** | **+ 2,451.4** | **+ 5.1** | **+ 7,474.7** | **+ 14.7** |

குறிப்பு: அடையாளங்கள் M2இன் மீது ஏற்பட்ட தாக்கத்தைக் குறிக்கின்றன.
* திவற்ரோர் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் தவிர.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

**வெளிநாட்டு வங்கித்தொழில் சொத்துக்கள் (தேறிய)**

மாதாந்தம




இலங்கை மத்திய வங்கி.

வெளிநாட்டுத்துறையின் தொழிற்பாடுகள் 1987 இல் ரூ. 4,430 இலட்சம் அல்லது 5 சதவீதங் கொண்ட சுருக்கத் தாக்கத்தினை $M_2$ இன்மீது ஏற்படுத்தியது. நாட்டின் வெளிநாட்டு வங்கித்தொழில் (தேறிய) வீழ்ச்சியடைந்து 1984 இல் ஏற்பட்ட மிகைக்குப் பின்பு சென்மதி நிலுவை தொடர்ந்து பாதிப்படைந்து செல்வதை இது மூன்ருவது தொடர்ச்சியான ஆண்டாகக் காட்டுகிறது. 1985 இலும், 1986 இலும் வெளிநாட்டு வங்கித்தொழில் சொத்துக்களின் (தேறிய) வீழ்ச்சி முறையே ரூ. 6,910 இலட்சம் அல்லது 7 சதவீதமாகவும், ரூ. 4,140 இலட்சம் அல்லது 4 சதவீதமாகவும் விளங்கின. 1987 இல் தேறிய வெளிநாட்டு வங்கிச் சொத்துக்களின் வீழ்ச்சி ரூ. 6,210 இலட்சங் கொண்ட மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களின் வீழ்ச்சியினதும் ரூ. 1,780 இலட்சங் கொண்ட வர்த்தக வங்கிகளின் தேறிய வெளிநாட்டுச் செலாவணி வைப்புக்களின் அதிகரிப்புக்களினதும் இணைந்த விளைவாகும்.

1987 இல் சென்மதி நிலுவை வெளிப்பாடு வர்த்தகக் கணக்கு, நடைமுறைக் கணக்கு ஆகிய இரண்டு நியதிகளிலும் ஓரளவு முன்னேற்றத்தினைக் காட்டியது. எனினும் உதவிப் பாய்ச்சலில் காணப்பட்ட குறிப்பிட்ட சில பின்னடைவுகள் காரணமாக மொத்த நிலுவையில் குறையில் காணப்பட்டதோடு வெளிநாட்டுச் சொத்துக்களின் மீதான எடுப்பனவுகள் மூலமாகவே நிதியிடப்படவேண்டியிருந்தது. இதனுலேயே வெளிநாட்டுத்துறையின் தொழிற்பாடுகள் பணநிரம்பலின் மீது சுருக்கத் தாக்கத்தினைக் கொண்டிருந்தன.

**வர்த்தக வங்கித் தொழில்**

1987 இல் திரவத்தன்மை தொடர்பாக வர்த்தக வங்கிகள் கலப்பு நிலையைக் கொண்டிருந்தன. சில வங்கிகள் ஆண்டு முழுவதும் அதிகளவு திரவத்தன்மையைக் கொண்டிருந்தமை அவற்றைக் குறுகியகால முதலீட்டுத்துறைகளைத் தேடுவதற்குக் கட்டாயப்படுத்தியவேளையில் வேறு சில வங்கிகள் தொடர்ந்தும் திரவத்தன்மைக் கட்டுப்பாடுகளை எதிர்நோக்கி வங்கிகளுக்கிடையேயான அழைப்புச் சந்தையில் கடன்படுவதற்கு அவற்றைக் கட்டாயப்படுத்தியது. எனினும் பற்ருக்குறை காணப்பட்ட வங்கிகளால் திரவத்தன்மைத் தேவைகளின் முழுமையான அளவும் சந்தை மூலங்கள் ஊடாகப் பெறப்பட்டுத் திரவத் தன்மையினை அதிகரிப்பதற்கு மத்திய வங்கி ஒதுக்குவிதிகளை நாடுவதற்கான தேவையைத் தவிர்த்துக் கொண்டன.

அழைப்புச் சந்தையின் கொடுக்கல் வாங்கல்களின் மட்டம் குறைவானதாக விளங்கி இச்சந்தையில் நிதியங்களுக்கான மிதமான கேள்வியினைப் பிரதிபலித்தது. அழைப்புப் பணச்சந்தையின் வெளிநிற்கும் சராசரி மாதாந்தக் கடன் வழங்கல்கள் இவ்வாண்டில் ரூ. 1,090 இலட்சத்தால் மட்டுமே அதிகரித்து, 1987 இல் 8,150 இலட்சத்தினை அடைந்தவேளையில் இச்சந்தையின் வட்டிவீதங்கள் 1986 இன் ஆண்டுக்கு 9.5—14.0 சதவீதத்திற்கும், 1987 இல் ஆண்டுக்கு 5.0—21.0 சதவீதத்திற்கும் இடையில் தளம்பலைக் கொண்டிருந்தன. பின்னையது இவ்வாண்டில் சில வங்கிகளின் திரவ நிலைமையில் காணப்பட்ட கடுமையான தளம்பலைப் பிரதிபலித்தது.

1987 இல் குறுகியகால நிதியங்களை வர்த்தக வங்கிகள் முதலிடுவதற்கான கவர்ச்சிகரமான முதலீட்டுத்துறையாகத் திறைசேரி உண்டியல் சந்தை விளங்கியது வர்த்தக வங்கிகளின் திறைசேரி உண்டியல் வைப்புக்கள் 1986 இன் இறுதியில் ரூ. 11,710 இலட்சத்திலிருந்து செத்தெம்பர் இறுதியில் ரூ. 51,310 இலட்சத்திற்கு உயர்வடைந்து 1987 இறுதியில் ரூ.38,500 இலட்சத்திற்குவீழ்ச்சியடைந்தது.

இது ஒருபுறத்தில், முதலாந்தரத் திறைசேரி உண்டியல்கள் மீதான சார்பு ரீதியில் கவர்ச்சிகரமான வீதங்களினதும் மறுபுறத்தில் முதலாந்தரத் திறைசேரி உண்டியல்களுக்கான சந்தையை முன்னேற்றுவதற்கு அண்மைய கடந்த காலங் களில் சில சீரமைப்புக்கள் அறிமுகப்படுத்தப்பட்டமையினதும் விளைவாகும். பின்னை யது மேலதிகத் திரவத்தன்மையை அகற்றுவதிலும் இச்சந்தையில் மத்திய வங்கி யின் விற்பனைகளின் மீது கிடைக்கத்தக்க கவர்ச்சியற்ற இலாபங்களைத் தொடர்ந்து இரண்டாந்தரத் திறைசேரி உண்டியல் சந்தையின் பாதிப்படைந்த நடவடிக்கை களினால் ஏற்பட்ட நிலைமையினை எதிர்கொள்வதனையும் சிறப்பான இலக்காகக் கொண்ட வாராந்த திறைசேரி உண்டியல்கள் வெளியீட்டையும் உள்ளடக்குகிறது. இரண்டாந்தரத். திறைசேரி உண்டியல் சந்தையின் வெளிநிற்கும் தேறிய விற்பனை கள் 1986 இன் இறுதியின் ரூ. 12,550 இலட்சத்திலிருந்து 1987 இறுதியில் ரூ. 8,120 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தது. வர்த்தக வங்கிகள் வசமிருந்த மத்திய வங்கியின் பிணைகள் முன்னேற்றகரமாகத் தீர்க்கப்பட்டமையும் இவ் வாண்டில் முதலாந்தரத் திறைசேரி உண்டியல் சந்தையின் முன்னேற்றத்திற்கு உதவியது. வர்த்தக வங்கிகள் வசமுள்ள மத்திய வங்கிப் பிணைகள் 1986 இறுதி யின் ரூ. 19,050 இலட்சத்திலிருந்து 1987 இறுதியில் ரூ. 600 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தன.

வர்த்தக வங்கிகளால் வழங்கப்பட்ட வைப்புச் சான்றிதழ்களின் வெளிநிற்கும் தொகை மீதான எல்லை புறக்கீடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து அவ்வகை வைப்புக்கள் 1986 இறுதியில் ரூ. 16,730 இலட்சத்திலிருந்து 1987 இறுதியில் ரூ. 20,320 இலட்சத்திற்கு அதிகரித்ததன் மூலம் வர்த்தக வங்கிகளின் மூலவள அடிப்படையை அதிகரித்தது.

1987 இல் வங்கித்தொழில் நேரங்களை நீடித்தல், வங்கித்தொழில் தொழிற் பாடுகளைக் கணனிமயப்படுத்தல், மனிதவலு அபிவிருத்திப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை தீவிரப்படுத்தல் போன்றவை மூலம் வர்த்தக வங்கிகள் வாடிக்கை யாளரின் பணிகளைத் தொடர்ந்தும் முன்னேற்றின. இதேவேளை தன்னியக்க ரெலர் பொறியினை 1986 இல் இலங்கையில் அறிமுகப்படுத்திய வங்கி 1987 இல் இவ்வசதிகளை வெளிநாட்டு நாணயக் கணக்கு வைத்திருப்பவர்களுக்கு விரிவாக் கியது.

1987 இறுதியில், இலங்கையில் 23 வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவுகள் தொழிற்பட்டன. வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவுகளின் மொத்தச் சொத்துக்கள்/பொறுப்புக்கள் 1987 இல் ஐ.அ. டொலர் 250 இலட் சத்தால் வீழ்ச்சியுற்றன. எனினும் இலங்கை ரூபா, ஐ.அ. டொலருக்கெதிராகப் பெறுமதியில் வீழ்ச்சியடைந்தமை காரணமாக இலங்கை ரூபா நியதியில் மொத்தச் சொத்துக்கள்/பொறுப்புக்கள் இவ்வாண்டில் ரூ. 7,860 இலட்சத்தினால் அதி கரித்து 1987 இறுதியில் ரூ. 204,650 இலட்சத்தை அடைந்தது. வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவுகளின் தொழிற்பாடுகள் கொழும்பு பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழுவின் கீழ்வரும் செயற்றிட்டங்களுக்கும் ஏனைய ஒப்புத லளிக்கப்பட்ட வதிவோர்களுக்கும் நிதியிடுவதனை மையமாகத் தொடர்ந்தும் கொண்டிருந்தன.

மீளாய்வின் கீழுள்ள ஆண்டில் வர்த்தக வங்கிகளின் மொத்த மூலவளங்கள் முன்னைய ஆண்டின் ரூ. 39,270 இலட்சம் மட்டுமே கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ரூ. 105,050 இலட்சத்தால் அதிகளவு அதிகரித்தன. 1987 இன் மூலவள வளர்ச்சியில் ரூ. 64,410 இலட்சத்திற்கு வகை கூறும் கணிசமான பங்கு வைப்புத் திரட்டல்மூலமாகப் பெறப்பட்டதாகும். வைப்புக்களின் வளர்ச்சி, தவணை சேமிப்பு வைப்புக்கள் (இரு அரச வங்கிகளினதும் நீண்ட தவணை வைப்புக்களையும் உள்ளடக்கி) கேள்வி வைப்புக்கள் என்பன முறையே ரூ. 48,160 இலட்சம், ரூ. 16,250 இலட்சங் கொண்ட அதிகரிப்புக்களைக் கொண்டிருந்தன. 1987 இல் வர்த்தக வங்கிகளின் கடன்பாடுகள் ரூ. 17,890 இலட்சத்தால் உயர்வடைந்தன. வங்கிகளுக்கிடையேயான கடன்பாடுகளின் ரூ. 6,400 இலட்சங் கொண்ட அதிகரிப்பினையும் (மத்திய வங்கியிலிருந்தான கடன்பாடுகள் உட்பட) வெளிநாட்டுக் கடன்பாடுகளின் அதிகரிப்பான ரூ. 11,490 இலட்சத்தினையும் இது உள்ளடக்குகிறது. இவ்வாண்டில் மத்திய வங்கியிடமிருந்தான வர்த்தக வங்கிக் கடன்பாடுகள் ரூ. 3,390 இலட்சத்தால் அதிகரித்ததோடு இவை வங்கியினால் தொழிற்படுத்தப்பட்ட வெவ்வேறு மீள்நிதியிடல் வசதிகளின் கீழ் மேற்கொள்ளப் பட்டன. இதேவேளை வர்த்தக வங்கிகளின் ஏனைய பொறுப்புக்களும் செலுத்தப் பட்ட மூலதனங்களும், ஒதுக்குகளும் 1987 இல் முறையே ரூ. 19,290 இலட்சத் தாலும், ரூ. 5,450 இலட்சத்தாலும் உயர்வடைந்து அதன் மூலம் மூலவள அடிப்படையை உயர்த்தியது.

### அட்டவணை 1.48

### வர்த்தக வங்கிகளின் மூலவளங்களிலும், பயன்பாட்டிலும் ஏற்பட்ட மாற்றங்கள்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| துறை | 1985முடிவில் 1986முடிவில் | 1986முடிவில் 1987 முடிவில் |
|---|---|---|
| 1. அரசு ... ... ... | 297.4 | — 3,035.1 |
| 2. மத்திய வங்கி ... ... ... | 634.0 | 3,243.9 |
| 3. அரச கூட்டுத்தாபனங்கள் ... ... ... | — 1,670.0 | — 1,652.0 |
| 4. கூட்டுறவு நிறுவனங்கள் ... ... ... | 21.5 | 472.5 |
| 5. ஏனைய தனியார் ... ... ... | — 163.5 | — 67.9 |
| 6. வங்கிகளுக்கிடையில் ... ... ... | 705.4 | 1,216.5 |
| 7 வெளிநாட்டு ... ... ... | 175.2 | 177.9 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

குறிப்பு: கழித்தல் அடையாளம் மூலவளங்களின் தேறிய பயன்பாட்டினைக் குறிக்கின்றது.

அட்டவணை 1.48 வர்த்தக வங்கிகளின் மூலவளங்களினதும் அவற்றின் பயன்பாட்டினதும் மாற்றங்களைத் தேறிய அடிப்படையில் தருகிறது. இவ்வாண் டில் வர்த்தக வங்கிகளின் மூலவளங்களின் தேறிய பயன்பாட்டில் ரூ. 30,350 இலட்சத்திற்கு வகை கூறும் பெரும் பங்கினை அரசதுறை எடுத்துக் கொண்டது. இதேவேளை 1987 இல் அரச கூட்டுத்தாபனங்கள் வர்த்தக வங்கிகளிலிருந்து

ரூ. 16,520 இலட்சங் கொண்ட மூலவளங்களை ஈர்த்துக் கொண்டன. வெளி நாட்டுத்துறையின் கொடுக்கல் வாங்கல்களும் வர்த்தக வங்கிகளிலிருந்து ரூ. 1,780 இலட்சங் கொண்ட தேறிய வெளிக்கொடுப்பனவினை இவ்வாண்டில் விளைவித்தன.

1987 இல் வர்த்தக வங்கி ஒதுக்குகளைப் பொறுத்தவரை மத்திய வங்கியின் அணுகுமுறை மாற்றமடைந்து காணப்பட்டது. ஒதுக்குத் தேவைகள் குறைக்கப் பட்டன. திறைசேரி உண்டியல்களைக் கூடியளவு கவர்ச்சியுள்ளதாக்குவதற்காக மத்திய வங்கி தனது சொந்தப் பிணைகளின் வெளியீட்டையும் புறக்கீடு செய்தது. இதனுல் மத்திய வங்கியிடமிருந்து வர்த்தக வங்கிகளுக்கு ரூ. 32,440 இலட்சங் கொண்ட தேறிய மூலவளப் பங்களிப்பொன்று கிடைத்தது. இது மத்திய வங்கி யிடமிருந்தான கடன்களின் அதிகரிப்பு (ரூ. 3,390 இலட்சம்) மத்திய வங்கியிட முள்ள ஒதுக்குகளில் செய்யப்பட்ட குறைப்பு (ரூ. 10,600 இலட்சம்), மத்திய வங்கி வசமிருந்த பிணைகளின் வீழ்ச்சி (ரூ. 18,450 இலட்சம்) என்பவற் றின் இணைந்த விளைவாகும். இவ்வாண்டில் வங்கிகளுக்கிடையேயான துறையி லிருந்தான மூலவளங்களின் தேறிய திரட்டல் ரூ. 12,160 இலட்சம் விளங்கிய வேளையில் கூட்டுறவு நிலையங்களின் உதவுதொகை ரூ. 4,720 இலட்சமாக விளங்கியது.

**வங்கி விரிவாக்கம்**

1987 மாச்சில் புதிதாகப் பதிவு செய்யப்பட்ட உள்நாட்டு வங்கியான வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி கொழும்பில் தொழிற்பாட்டினைத் தொடங் கியது. இது இலங்கையில் தொழிற்படும் வர்த்தக வங்கிகளின் எண்ணிக்கையை 24 ஆக உயர்த்தியதோடு உள்நாட்டு வங்கிகளின் எண்ணிக்கையை 5 ஆக உயர்த்தியது. வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி ஒரு விலை குறிக்கப்பட்ட பொதுக் கூட்டு நிலையமாகப் பதிவு செய்யப்பட்டதுடன் ரூ. 1,390 இலட்சங் கொண்ட மூலதனத்தை இது பொதுமக்களுக்கான பங்கு வழங்கல் மூலம் திரட்டியது.

இலங்கை வங்கி அதன் இரு வேளாண்மை பணிநிலையக் கிளைகளை மீள அமைவு செய்ததன்மூலமும் ஒறுவலவிலுள்ள கிளையினைக் கடுவெலவிலுள்ள கிளை யுடன் ஒன்று இணைத்ததன்மூலம் கலவெலவிலும் ரிக்கிலகஸ்கடவிலும் இரு முதன் மைக் கிளைகளைத் திறந்தது. இதன் விளைவாக 1987 இறுதியில் இலங்கை வங்கியின் முதன்மைக் கிளைகளின் மொத்த எண்ணிக்கை 239 ஆக உயர்வடைந்தவேளையில் வேளாண்மைப் பணி நிலைய கிளைகளின் எண்ணிக்கை 49 இற்கு வீழ்ச்சியடைந்தது. மக்கள் வங்கியும், அட்டன் நசனல் வங்கியும் முறையே இரத்தினபுரி நகரிலும் களுத்துறையிலும் ஒவ்வொரு கிளையைத் திறந்து அவற்றின் கிளைகளின் மொத்த எண்ணிக்கையை முறையே 298 ஆகவும், 33 ஆகவும் உயர்த்தின. இதேவேளை வரையறுக்கப்பட்ட வர்த்தக வங்கிகளின் கிளை வலையமைப்பு 15 ஆகத் தொடர்ந்து மாருதிருந்தது. மேலும் வெளிநாட்டு வங்கிகளின் கிளைகளின் மொத்த எண்ணிக்கை 1987 இறுதியில் 23 ஆக மாருதிருந்தது. இதன்படி வர்த்தக வங்கிகளின் மொத்த எண்ணிக்கை மீள அமைவு செய்த வேளாண்மைப்பணி நிலையங்களின் கிளைகள் நீங்கலாக 1987 இறுதியில் 700 ஆக விளங்கியது. இதே வேளை பொரளையிலும், அக்மனவிலும் திறக்கப்பட்ட இரு கிளைகளுடன் தேசிய சேமிப்பு வங்கி ஆண்டு முடிவில் நாட்டில் 62 கிளைகளைத் தொழிற்பாட்டில் கொண்டிருந்தது.

1987 இல் கேகாலை, காலி, புத்தளம், கண்டி ஆகிய மாவட்டங்களில் நான்கு புதிய பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் திறக்கப்பட்டதோடு பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் மொத்த எண்ணிக்கை 9 ஆக உயர்ந்தது. மாத்தறையிலுள்ள பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கியைத் தவிர, ஏனைய எல்லாப் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளும் இவ்வாண்டில் தத்தமது மாவட்டங்களில் கிளைகளைத் திறந்தன. இதனைத் தொடர்ந்து ஆண்டின் முடிவில் தலைமை அலுவலகங்கள் உட்பட 61 பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிக் கிளைகள் தொழிற்பாட்டிலிருந்தன.

அட்டவணை 1.49

**வங்கிக் கிளைகளின் பரம்பல்**

| வகை | 1985 | 1986 | 1987 |
|---|---|---|---|
| **1. வர்த்தக வங்கிகள்** | | | |
| 1.1 உள்நாட்டு வங்கிகளின் எண்ணிக்கை ... | 4 | 4 | 5 |
| 1.2 கிளைகளின் எண்ணிக்கை (அ) ... ... | 671 | 676 | 677 |
| 1.2.1 இதில் வேளாண்மைப் பணி நிலையங்கள் ... | 53 | 52 | 49 |
| 1.3 வெளிநாட்டு வங்கிகளின் எண்ணிக்கை ... | 21 | 19 | 19 |
| 1.4 கிளைகளின் எண்ணிக்கை ... ... | 26 | 23 | 23 |
| 1.5 கிளைகளின் மொத்த எண்ணிக்கை (அ) ... | 697 | 699 | 700 |
| **2. பி. கி. அ. வங்கிகள் (ஆ)** | | | |
| 2.1 பி. கி. அ. வங்கிகளின் எண்ணிக்கை ... ... | 4 | 5 | 9 |
| 2.2 கிளைகளின் எண்ணிக்கை ... ... | 17 | 32 | 61 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) விரிவாக்க அலுவலகங்கள், கச்சேரிக் கிளைகள், கொடுப்பனவு அலுவலகங்கள், வெளிநாட்டிலுள்ள கிளைகள் என்பவற்றை உள்ளடக்கும். மீளமைக்கப்பட்ட வேளாண்மைப் பணி நிலையக்கிளைகள் நீங்கலாக.


(ஆ) 1985 இன் எண் 15 கொண்ட பி. கி. அ.வ் சட்டத்தின் கீழ் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் நிறுவப்பட்டன.

## வட்டி வீதங்கள்

முன்னைய ஆண்டில் அவதானிக்கப்பட்ட போக்கிற்கு இசைவாக வட்டிவீத அமைப்பு கீழ்நோக்கி மிதமாகக் குறைவடைந்ததுடன் சில வகை முற்பணங்களுக்கும் வைப்புகளுக்கும் பொருத்தமான வட்டி வீதங்களில் மேலும் குறைப்புக்கள் செய்யப்பட்டன. இது குறிப்பாக ஆண்டின் முதல் அரைப்பகுதியில் முக்கியமாக நிதித்துறையில் கொடுகடனுக்கான குறைந்த கேள்வியின் காரணமாக எழுந்த மேலதிகத் திரவத் தன்மையை ஓரளவிற்குப் பிரதிபலித்தது. எனினும் எதிர்பார்த்தளவுக்கு வட்டி வீதம் வீழ்ச்சியடையவில்லை. நிலையான வைப்புக்கள் மீதான வட்டியை ஆண்டுக்கு 13 சதவீதமாகப் பேணியதன் மூலம் வர்த்தக வங்கிகளை வட்டி வீதங்களின் திருத்தம் தொடர்பாகக் கூடியளவு பாதுகாப்பான கொள்கைகளைப் பின்பற்ற வேண்டிய கட்டாய நிலைமைக்கு உட்படுத்திய தேசிய சேமிப்பு வங்கியின் நடவடிக்கை இதற்குப் பெருமளவிற்குக் காரணமாகும்.

## வட்டி வீதங்கள்

காலாண்டு இறுதி எண்தொகைகள்




இலங்கை மத்திய வங்கி

தேசிய சேமிப்பு வங்கி அதன் வைப்பு வீதங்களில் எதுவித மாற்றங்களையும் செய்யாதபோதிலும் இரு அரச வங்கிகளும் பல்வேறுவகையான வைப்புக்கள் மீது வழங்கப்பட்ட வட்டி வீதங்களைக் குறைத்தன. உதாரணமாக 1986 திசெம்பர் இறுதியில் ரூ. 10,000 இற்கு மேற்பட்ட சேமிப்பு வைப்புக்களுக்கு ஆண்டுக்கு 12 சதவீத வட்டியையும் அந்த மட்டத்திற்குக் குறைவான வைப்புக்களுக்கு ஆண்டுக்கு 10 சதவீத வட்டியையும் வழங்கிய இலங்கை வங்கி 1987 திசெம்பரில் இருந்து எல்லா சேமிப்பு வைப்புக்களின் மீதும் ஆண்டுக்கு 10 சதவீதமான ஒரேயளவான வீதத்தை அறிமுகப்படுத்தியது. இதேவேளை இரு அரச வங்கிகளும் வேறுபட்ட முதிர்ச்சியைக் கொண்ட தவணை வைப்புக்கள் மீதான வீதங்களில் சிறு அளவிலான கீழ்நோக்கிய திருத்தங்களை ஆண்டின் இறுதியில் மேற்கொண்டன.

முன்னைய ஆண்டினைப்போலவே, நிதிக் கூட்டுநிலையம் தவணை வைப்புக்கள், வைப்புச் சான்றிதழ்கள் என்பனமீது போட்டி ரீதியிலான வீதங்களைத் தொடர்ந்தும் வழங்கின. உதாரணமாக ஆண்டின் இறுதிக் காலாண்டில், சில முதன்மை நிதிக் கூட்டுநிலையங்களினால் வழங்கப்பட்ட ஓராண்டு வைப்பு வீதம் வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட ஆண்டுக்கு 8.5—14.0 சதவீத வீச்சிற்கு எதிராக ஆண்டுக்கு 16—20 சதவீத வீச்சில் விளங்கின. எனினும் 1987 திசெம்பரிலிருந்து நிதிக் கூட்டுநிலையங்களின் வைப்பு வீதங்கள் நிதிக் கூட்டுநிலையங்கள் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட பணிப்புரைகளின் நியதியில் சில வரம்புகளுக்கு உட்பட்டனவாக விளங்கின. இப்பணிப்புரைகளின் நியதியின்படி, 12 மாத வைப்பின்மீது வழங்கப்படத்தக்க ஆகக்கூடிய வட்டி வீதம் ஆண்டுக்கு 17 சதவீதமாகவும் 12 மாதங்களுக்குக் கூடிய முதிர்ச்சிக் காலத்தைக் கொண்ட வைப்புக்கள்மீது வழங்கப்படத்தக்க வட்டி வீதம் ஆண்டுக்கு 18 சதவீதமாகவும் விளங்கின. எனினும் தற்போதைய சந்தை வட்டி வீதங்களை நோக்குகையில் குறைந்த பட்சம் பெரிய நிதிக் கூட்டுநிலையங்களானது இவ்வரம்புகளை ஒரு கட்டுப்பாடாகக் கருத இடமில்லை.

இவ்வாண்டில், குறுகிய காலப் பணச்சந்தை வீதங்கள் மேலும் வீழ்ச்சிப் போக்கினைக் கொண்டிருந்தன. முதலாந்தரத் திறைசேரி உண்டியல் சந்தையில் வட்டி வீதங்களைத் தீர்மானிப்பதில் சந்தை விலைகள் முக்கிய பங்கினை வகிப்பதற்கு அனுமதிக்கப்பட்டன. மேலும் முதலாந்தர திறைசேரி உண்டியல் சந்தைக்கு முதலீட்டாளர்களைத் தூண்டுவதற்காக இரண்டாந்தர திறைசேரி உண்டியல் சந்தையிலுள்ள கழிவு வீதம் (விற்பனை) கணிசமானளவு குறைக்கப்பட்டது. ஆண்டின் முதல் 8 மாதங்களில் முதலாந்தரத் திறைசேரி உண்டியல் சந்தையின் வட்டி வீதங்கள் ஆண்டுக்குப் பெரும்பாலும் 8—12 சதவீத வீச்சில் விளங்கின. எனினும் அதன் பிறகு வீதங்கள் 8—11 சதவீதமான குறைந்த வீச்சில் தளம் பலைக் கொண்டிருந்ததுடன் பொதுவான வட்டி வீதங்களின் அமைப்பில் கீழ் நோக்கிய போக்கிற்கு இசைவாகவும் விளங்கின. இதேவேளை மத்திய வங்கிப் பிணைகள் மீதான நறுக்கு வீதம் 1987 மாச்சில் ஆண்டுக்கு 12 சதவீதத்திலிருந்து 11 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டதோடு முதிர்ச்சிக் காலம் ஆறு மாதங்களிலிருந்து ஒரு ஆண்டாக நீடிக்கப்பட்டது.

வட்டி வீதங்கள் சந்தை நிலைமையினைப் பிரதிபலிக்கும் வகையில் அந்நோக்கிற்கு இசைவாக 1987 ஒகத்தில் வங்கி வீதம் 1 சதவீதப் புள்ளியால் 10 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. மேலும் நியதிச்சட்ட ஒதுக்கு விகிதங்கள் குறைக்கப்பட்டதிலிருந்து வர்த்தக வங்கிகளுக்கு நிதியங்களின் செலவு குறைந்தமையால் வர்த்தக வங்கிகள் தங்கள் கடன் வழங்கல் வீதங்களை மேலும் குறைக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

மத்திய வங்கி வர்த்தக வங்கிகளின் நிறையேற்றப்பட்ட சராசரி முதன்மைக் கடன் வழங்கல் வீதத்தையும் அதிகுறைந்த முதன்மைக் கடன் வழங்கல் வீதத்தையும் வாராந்த அடிப்படையில் வெளியிடுவதனைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. 1987 இல் நிறையேற்றப்பட்ட சராசரி முதன்மைக் கடன் வழங்கல் வீதம் முன்னைய ஆண்டின் ஆண்டுக்கு 14—15.6 சதவீத வீச்சிற்கு எதிராகச் சிறிதளவு குறைவான வீச்சான ஆண்டிற்கு 13.5—15.1 சதவீதத்திற்கிடையே தளம்பியது. வர்த்தக வங்கிகளின் கடன் வழங்கல் வீதங்கள் சிறிதளவிலாயினும் கீழ்நோக்கிச் சென்றமைக்குச் சான்றுகள் உள்ளன. உதாரணத்திற்கு 1985 இறுதியின் 20.1 சதவீதத்திலிருந்து 1986 இறுதியில் 19.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த வர்த்தக வங்கிகளின் நிறையேற்றப்பட்ட சராசரி கடன் வழங்கல் வீதம் 1987 செத்தெம்பர் இறுதியில் 18.4 சதவீதத்திற்கு மேலும் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை 1987 இல் நீண்டகாலக் கொடுகடன் நிறுவனங்களின் கடன் வழங்கல் வீதம் ஏறத்தாள மாறாதிருந்தது.

**மத்திய வங்கித்தொழில்**

1987 இறுதியில் மத்திய வங்கியின் மொத்தச் சொத்துக்கள்/பொறுப்புக்கள் ரூ. 454,440 இலட்சமாக விளங்கி 1986 இன் ஏறத்தாள ஒரு அளவான ரூ. 20,050 இலட்சம் (5 சதவீதம்) அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ரூ. 22,800 இலட்சம் (5 சதவீதம்) அதிகரிப்பினைக் காட்டியது.

சொத்துக்கள் பக்கத்தில் மத்திய வங்கியின் பன்னாட்டு ஒதுக்கு (மொத்தம்) மூன்றாவது ஆண்டாகத் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தது. 1987 இல் முக்கியமாக வெளிநாட்டிலுள்ள காசு, நிலுவைகளின் உடமைகளில் ஏற்பட்ட ரூ. 15,240 இலட்சம் கொண்ட வீழ்ச்சி காரணமாகப் பன்னாட்டு ஒதுக்கு ரூ. 7,010 இலட்சத்தால் (7 சதவீதம்) வீழ்ச்சியடைந்தது. இதேவேளை வெளிநாட்டுப் பிணைகளிலும் திறைசேரி உண்டியல்களிலுமான முதலீடுகள் ரூ. 8,200 இலட்சத்தால் உயர்வடைந்தன.

முன்னைய ஆண்டில் அவதானிக்கப்பட்ட போக்கினைத் தொடர்ந்து மத்திய வங்கியின் உள்நாட்டுச் சொத்துக்கள் (ஏனைய சொத்துக்களையும் கணக்குகளையும் நீக்கி) ரூ. 16,950 இலட்சத்தால் (6 சதவீதம்) அதிகரித்தது. இவ்வதிகரிப்பு உள்நாட்டுச் சொத்துக்களின் எல்லா முதன்மைப் பிரிவுகளிலும் பிரதிபலித்தது. அரசிற்கான கடன்களும் முற்பணங்களும், அரச உத்தரவாதப் பிணைகளிலுள்ள முதலீடுகள் ஆகியன முறையே ரூ. 6,430 இலட்சத்தாலும், ரூ. 6,680 இலட்சத்தாலும் அதிகரித்தன. வர்த்தக வங்கிகளுக்கும் ஏனைய நிதி நிறுவனங்களுக்குமான முற்பணங்களும் ரூ. 3,440 இலட்சங் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்ததுடன் இதில் குறுகிய கடன்களின் அதிகரிப்பு ரூ. 870 இலட்சமாக விளங்கியது. 1987 இறுதியில் வங்கி ரூ. 400 இலட்சத்தினைப் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளுக்கு வழங்கி ஏனைய நிறுவனங்களுக்கான அதன் பங்களிப்புத் தொகையை ரூ. 2,000 இலட்சமாக அதிகரித்தது. இதேவேளை வங்கியின் ஏனைய சொத்துக்களும் கணக்குகளும் ரூ. 12,870 இலட்சத்தால் உயர்வடைந்ததுடன் இதற்குப் பெரும்பாலும் முன்மாற்று வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கலில் காணப்பட்ட 8,730 இலட்ச அதிகரிப்பே காரணமாகும்.

பொறுப்புக்கள் பக்கத்தில், சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தையும் வைப்புக் களையும் உள்ளடக்கும் நாணயப் பொறுப்புக்கள் 1987 இல் ரூ. 1,080 இலட்சத் தால் சிறிதளவால் வீழ்ச்சியுற்றது. எனினும் சுற்றோட்டத்திலுள்ள நாணயம் 1987 இல் ரூ. 22,000 இலட்சத்தால் அதிகரித்தமையினால் நாணயப் பொறுப்புக் களின் வீழ்ச்சிக்கு வைப்புக்களில் காணப்பட்ட ரூ. 23,080 இலட்ச வீழ்ச்சியே முழுமையான காரணமாக இருந்தது. அரசு, வர்த்தக வங்கிகள் மற்றும் பன்னாட்டு நிறுவனங்கள், வெளிநாட்டு அரசுகள், வெளிநாட்டு வங்கித்தொழில் நிறுவனங்கள் ஆகியவற்றின் வைப்புக்கள் முறையே ரூ. 1,570 இலட்சம், ரூ. 9,980 இலட்சம், ரூ. 18,820 இலட்சத்தாலும் வீழ்ச்சியுற்றது. வர்த்தக வங்கிகளின் வைப்புக்களில் காணப்பட்ட வீழ்ச்சிக்கு (ரூ. 9,980 இலட்சம்) 1987 ஒகத்தில் நியதிச்சட்ட ஒதுக்கு விகிதங்களில் செய்யப்பட்ட குறைப்பே காரண மாகும். இதேவேளை அரசமுகவர் நிலையங்களினதும் நிறுவனங்களினதும், ஏனைய வற்றினதும் வைப்புக்கள் முறையே ரூ. 400 இலட்சத்தாலும், ரூ. 6,900 இலட்சத்தாலும் அதிகரித்தன.

நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் நிதியத்தின் கீழ் மீள் நிதியிடல் இய லளவை உயர்த்தும் நோக்கில் 1987 நவெம்பரில் ரூ. 2,500 இலட்சங் கொண்ட மாற்றல் ஒன்று வங்கியின் பொது ஒதுக்கிலிருந்து மேற்கொள்ளப்பட்டது. இதன் மூலம் நிதியத்தின் மொத்த மூலவளங்களை ரூ. 12,750 இலட்சமாக உயர்த்தியது. இவ்வாண்டில் முக்கியமாகப் பன்னாட்டு ஒதுக்கு மீள் மதிப்புச் கணக்கில் ரூ. 14,260 இலட்சம் கொண்ட அதிகரிப்பின் காரணமாக வங்கியின் ஏனைய பொறுப்புக்களும் கணக்குகளும் ரூ. 28,790 இலட்சத்தால் உயர்வடைந்தன.

**நாணயக் கொள்கை**

1984 இலிருந்து நடைமுறையிலிருக்கும் கட்டுப்பாடான நாணயக்கொள்கை முறை 1987 இல் ஓரளவுக்குத் தளர்த்தப்பட்டது. தளர்வுகள் முக்கியமாக நியதிச் சட்ட ஒதுக்குத் தேவைகளில் செய்யப்பட்ட கீழ்நோக்கிய திருத்தம், மத்திய வங்கியிலிருந்து மீள்நிதியிடல் வசதிகளின் மேலதிக விரிவாக்கம் போன்ற வற்றின் மூலம் மேற்கொள்ளப்பட்டது. நாணயக் கொள்கையினைத் தளர்த்தும் நடவடிக்கை ஆண்டின் முதல் அரைப்பகுதியில் நிலவிய விலைகள் தொடர்பான உறுதியான நிலைமைகளினால் உதவியளிக்கப்பட்டது. நியாயமான செலவில் போது மான அளவு கொடுகடனை வழங்குவதற்கு வர்த்தக வங்கிகளை அனுமதிப்பதன் மூலம் பொருளாதார நடவடிக்கைகளுக்குக் குறிப்பாக, தனியார்துறையில் இதனை அளிப்பதற்குத் திட்டமிடப்பட்டது. மேலும் வட்டி வீதங்களைத் தீர்மானிப்பதில் குறிப்பாக, சந்தையின் குறுகிய காலத்தில் சந்தை விசைகள் முக்கிய பங்கினை வகிப்பதற்கு அனுமதிக்கப்பட்டன.

பெருமளவிற்கு உள்நாட்டுக் கொடுகடனின் குறைந்த வளர்ச்சியினால் குறிப் பாக, 1986 இல் பொருளாதாரத்தின் தனியார்துறையில் பாதிப்படைந்த விரிந்த பணநிரம்பலின் ($M_2$) மெதுவான வளர்ச்சியை நோக்குகையில் 1987 இல் நாணயக் கொள்கையின் தளர்த்தல் வெவ்வேறு நிலைகளில் நியதிச்சட்ட ஒதுக்குத் தேவைகளின் குறைப்புக்களின் மூலம் மேற்கொள்ளப்பட்டது. 1984 இன் பிற் பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட அளவுத் திட்டத்தின் கீழ் சிறப்பு ஒதுக்குகள் பேணப்படுவதற்கான தேவை 1986 இன் முற்பகுதியில் புறக்கீடு செய்யப்பட்டதி லிருந்து இச்செய்முறை தொடங்கியது. இதனைத் தொடர்ந்து 1983 திசெம்பரில் விதிக்கப்பட்ட மேலதிகப் பற்றுக்களின் பயன்படுத்தப்படாத நிலுவைகளுக்கு எதிராக ஒதுக்குகள் பேணப்படவேண்டிய தேவை 1987 யூனிலிருந்து புறக்கீடு

செய்யப்பட்டது. எனினும் ஒகத்து முற்பகுதியில் முக்கிய திருத்தம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. கேள்வி வைப்புக்கள் மீதான ஒதுக்கு விகிதம் 18 சத வீதத்திலிருந்து 10 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டவேளையில் தவணை வைப்புக்கள் மீதானவை (90 நாட்களை விஞ்சாத) 14 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாகக் குறைக்கப்பட்டதன் மூலம் எல்லா வகையான வர்த்தக வங்கிகளின் வைப்புப் பொறுப்புக்களும் 10 சதவீதமான ஒரே விகிதத்தைக் கொண்டு விளங்கின. மேற் குறிப்பிட்ட திருத்தத்தைத் தொடர்ந்து வைப்புப் பொறுப்புக்கள் மீதான சராசரி ஒதுக்கு விகிதம் 12.3 சதவீதத்தினின்று 10.0 சதவீதத்திற்கு வீழ்ச்சி யடைந்தது. 1987 இல் வர்த்தக வங்கிகளின் மொத்த வைப்புக்களில் ரூ. 32,400 இலட்ச அதிகரிப்புக் காணப்பட்டபோதிலும் தேவையான மொத்த ஒதுக்குகள் 1986 இன் இறுதியின் ரூ. 53,800 இலட்சத்திலிருந்து 1987 இறுதியில் ரூ. 45,940 இலட்சமாக வீழ்ச்சியடைந்து ரூ. 7,860 இலட்சம் அல்லது 15 சத வீழ்ச்சியைப் பதிவு செய்தது.

இவ்வாண்டில், மத்திய வங்கி வர்த்தக வங்கிகளுக்கும் வேறு சில நிதி நிறுவனங்களுக்கும் பொருளாதாரத்தில் உண்மைப் பொருளாதார நடவடிக் கையை உறுதிப்படுத்தும் நோக்கில் முன்னுரிமைத் துறைகளில் குறுகியகால, நடுத்தர நீண்டகாலக் கடன் வழங்கலை முன்னேற்றும் பொருட்டு மீள்நிதியிடல் வசதிகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. பல்வகைத் திட்டங்களின் கீழ் வங்கி யால் வழங்கப்பட்ட வெளிநிற்கும் மீள்நிதியிடல் 1987 இல் ரூ. 3,440 இலட்சத் தால் அதிகரித்து ஆண்டு முடிவில் ரூ. 34,960 இலட்சத்தை அடைந்தது. ரூ. 2,570 இலட்சங் கொண்ட கணிசமான வளர்ச்சியைப் பதிவு செய்த நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் நிதியத்தின் கீழ் வழங்கப்பட்ட மீள்நிதியிடல் நிதியங் களுக்கான கேள்வி இவ்வாண்டில் மீள்நிதியிடல் அதிகரிப்புக்குப் பெரும்பாலும் பொறுப்பானதாக விளங்கியது. நடுத்தர நீண்டகால முதலீட்டை முன்னேற்று வதற்கு ஆண்டின் இறுதியளவில் நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் நிதியத்திற்கு வங்கியின் பொது ஒதுக்கிலிருந்து ரூ. 2,500 இலட்சங் கொண்ட மாற்றலொன்று செய்யப்பட்டதன் மூலம் நிதியத்தின் மீள்நிதியிடல் இயலளவு ரூ. 12,750 இலட்சமாக உயர்ந்தது.

1987 சனவரியிலிருந்து முதலாந்தரத் திறைசேரி உண்டியல்கள் மீதான இலாபத்தினைத் தீர்மானித்தல் சந்தை விசையினை அடிப்படையாகக் கொண்டுள்ள வேளையில் இரண்டாந்தரத் திறைசேரி உண்டியல்கள் மீதான இலாபத்தினைக் குறைவடையச் செய்வதன் மூலம் வர்த்தக வங்கிகளையும் ஏனைய பங்குபற்றுநர் களையும் முதலாந்தரச் சந்தை நடவடிக்கைகளில் கூடுதலாக ஈடுபடுவதற்கு வங்கி ஊக்கமளித்தது. மேலும் திறைசேரி உண்டியல்களின் வாராந்த வழங்கல் தொடர் ந்தும் மேற்கொள்ளப்பட்டமை மிகையான நிறுவனங்களின் திரவ நிதியங்களின் முதலீட்டுக்குக் குறுகிய காலக் கருவிகளின் ஒழுங்கான நிரம்பல் ஒன்றினை உத்தர வாதமளிப்பதற்கு உதவின. இதேவேளை மத்திய வங்கிப் பிணைகளின் நறுக்கு வீதம் 12 சதவீதத்திலிருந்து 11 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டமையும் முதிர்ச்சிக் காலம் 1987 மாச்சில் ஆறு மாதங்களிலிருந்து ஒரு ஆண்டிற்கு நீடிக்கப்பட்டமை யும் திறைசேரி உண்டியல்களை மேலும் கவர்ச்சிகரமானதாகச் செய்தன. இதன் விளைவாக மத்திய வங்கி அல்லாத மூலங்களின் வசமிருந்த திறைசேரி உண்டியல்கள் 1986 இறுதியில் ரூ. 40,550 இலட்சத்திலிருந்து 1987 இல் இறுதியில் ரூ. 75,620 இலட்சமாக அதிகரித்தன.

இவ்வாண்டில் 1987இன் தேசிய கொடுகடன் திட்டத்தின் கீழ் மத்திய வங்கி கொடுகடனின் துறை ரீதியிலான ஒதுக்கின் நியதிகளில் கொடுகடன் போக்கினைக் கண்காணித்தது. இத்திட்டம் இவ்வாண்டில் தனியார் துறைக்கான வர்த்தக வங்கி களின் கடன் வழங்கல்களையும் ஆறு நீண்டகாலக் கொடுகடன் நிறுவனங்களான தேசிய சேமிப்பு வங்கி, இலங்கைத் தேசிய அபிவிருத்தி வங்கி, அரச ஈட்டு முதலீட்டு வங்கி, இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம், தேசிய வீடமை ப்பு அபிவிருத்தி அதிகார சபை, வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றால் வழங்கப்பட்ட கொடுகடன்களையும் உள்ளடக்கியுள்ளது. தனியார் துறைக்கான வர்த்தக வங்கிக் கொடுகடன் (அரச கூட்டுத்தாபனங்கள், கூட்டுறவு நிலையங்கள், உண்மையான தனியார்துறை) 1986 இல் பதிவு செய்யப்பட்ட ரூ. 27,490 இலட்சம் அல்லது 7 சதவீத அதிகரிப்புக்கு மாறாக 1987 இல் ரூ. 54,020 இலட்சத்தால் அல்லது 13 சதவீதத்தால் வளர்ச்சியைச் கொடுக்கு மாறு திட்டமிடப்பட்டுள்ளது. வெளிநாட்டுத்துறையின் போக்கினையும் வங்கித் துறையிலிருந்து அரசின் கடன்பாட்டுத் தேவைகளையும் அடிப்படையாகக் கொண்டு ஆண்டின் முடிவில் வர்த்தக வங்கிகளின் தனியார்துறைக்கான கொடுகடனின் அனுமதிக்கத்தக்க மட்டம் *1987 இன் தேசிய சொடுகடன் திட்டத்தில் ரூ. 464,320 இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது. முன்னைய ஆண்டுகளைப்போல கொடுகடனின் துறைரீதியான ஒதுக்கில் வேளாண்மை, ஏற்றுமதி, கைத்தொழில் ஆகியன முன்னுரிமைத்துறைகளாகத் தொடர்ந்தும் விளங்கின.

1986 இல் கொடுகடன் திட்ட மதிப்பீடுகள் தொடர்பான கொடுகடன் பயன்பாடுகள் குறைந்த மட்டத்தில் காணப்பட்டமைக்கு மாறாக 1987 இறுதியில் பயன்படுத்தப்பட்ட கொடுகடனின் வெளிநிற்கும் மட்டம் இலக்கினை ரூ. 22,360 இலட்சத்தால் அல்லது 5 சதவீதத்தால் விஞ்சியது. வேளாண்மை நோக்கங்களுக் காக குறிப்பாக, நடுத்தர முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அரசுக்குச் சொந்தமான பெருந்தோட்டங்களின் அபிவிருத்திக்காக, அதிகளவிலான கொடு கடன் பயன்படுத்தப்பட்டமை இந்நிலைமைக்கு ஏறத்தாள முழுமையான காரணி யாகும். இவ்வகைக் கொடுகடனின் கணிசமான அதிகரிப்பு ஆண்டின் இறுதிக் காலாண்டில் கூடியளவில் காணப்பட்டதோடு இதனால் 1987 இல் இதே காலாண் டிலேயே கொடுகடன் திட்ட இலக்குகளுக்கு எதிராக மேலதிகமான பயன்பாடும் காணப்பட்டது. நிறுவனங்களின் வளர்ச்சியும் முன்னுரிமைத் தேவைகளின் அதி கரிப்பும் துறைரீதியிலான அடிப்படையில் கொடுகடன் தேவைகளை மதிப்பிடுவதை சில சமயம் கடுமையானதாக்கலாம்.

---

* தேசிய கொடுகடன் திட்டத்திலுள்ள தனியார் துறைக்கான கொடுகடனின் வரைவிலக்கணம் நாணய அளவையில் உள்ளதிலிருந்து வேறுபடுகின்றது. ஏனெனில் முன்னையது எற்றுமதி உண்டியல்களை உள்ளடக்குகிறது. ஆனால் சேகரிப்ப நிலையிலுள்ள பணவிடயங்களையும் தனியார் கூட்டு நிலையங்களில் வர்த்தக வங்கிகளின் முதலீடுகளையும் உள்ளடக்கவில்லை.